Crl. Misc.39
Pg.No.41/2024

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure).**
**IN THE COURT OF ADDITIONAL MAHILA COURT, KARUR**
**CC .No.28 / 2023**

Deposition of Witness : DW2

| | | | |
|---|---|---|---|
| Name | ராமசாமி | Taluk | |
| Father's Name | பாலகிருஷ்ணன் | Village | |
| Age | | Calling | Branch Operation Manager |

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act of 1969 (Act 44 of 1969) on the day of 09.06.2026.**

1 வது எதிரி ஆஜர்.

**முதல் விசாரணை**

1) நான் எந்த வங்கியில், எந்த கிளையில், எவ்வளவு வருடங்களாக பணிபுரிந்து வருகிறேன் என்றால் HDFC BANK, KARUR main branch ல் கடந்த 2 ஆண்டுகளாக Branch Operation Manager பணிபுரிந்து வருகிறேன். HDFC BANK ல் எத்தனை வருடங்களுக்கு முன் சேர்ந்தேன் என்றால் 16 ஆண்டுகளாக HDFC BANK ல் பணிபுரிந்து வருகிறேன். மேற்படி வங்கியில் வேலை செய்யும் நபர்களின் வருகை பதிவேடு எவ்வாறு பராமரிக்கபடுகிறது என்றால் தற்போது கணினியில் sign in செய்வது மூலம் பதிவு செய்து வருகிறோம். எப்போதிலிருந்து வங்கியில் வேலை பார்க்கும் நபர்களின் வருகை கணினியில் பதிவு செய்யப்பட்டு வருகிறது என்றால் 2019 ம் ஆண்டிலிருந்து கணினி மூலம் பதிவு செய்யப்படுகிறது. 2019 ஆண்டுக்கு முன்பு வருகை பதிவேடு Manual ஆக பராமரிக்கப்பட்டது.

2) எங்கள் கிளையில் பராமரிக்கப்படும் அனைத்து ஆவணங்களும், வருகை பதிவேடு உட்பட ஆண்டுதோறும் கணக்காளர் மூலம் கணக்கு தணிக்கை செய்யப்படும். நீதிமன்ற அழைப்பாணையின் குறிப்பிட்டுள்ளபடி

Sd/–T.Wajitha Thabassm
நீதித்துறை நடுவர்,
கூடுதல் மகிளா நீதிமன்றம்,
கரூர்.

பாலசுப்ரமணி த/பெ. ராமசாமி Employee code B3284 என்ற நபர் 16.06.2014 ம்தேதி பணிக்கு சேர்ந்து வேலை பார்த்து வந்தார் என்ற விவரத்தை எங்கள் கிளையில் பராமரிக்கப்படும் ஆவணங்கள் மூலம் தெரிந்து கொண்டேன். நான் சாட்சியம் அளிப்பதற்கு வங்கி கிளை மூலம் வழங்கப்பட்ட அதிகார கடிதத்தை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்கிறேன். **09.06.2026 ம்தேதியிட்ட வங்கி கிளை மூலம் வழங்கப்பட்ட அதிகார கடிதம் எ.ம.சா.ஆ.16 ஆக குறியீடு செய்யப்படுகிறது.( அரசு தரப்பு வழக்கறிஞர் ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது).** மேற்படி பாலசுப்ரமணி த/பெ. ராமசாமி என்பவர் அழைப்பாணையில் குறிப்பிட்டுள்ள 11.05.2018 ம்தேதி பணியில் பணிபுரிந்தாரா என்பதற்காக ஆகஸ்ட் 2014 முதல் நவம்பர் 2018 வரை எங்கள் கிளையில் பராமரிக்கப்படும் பணியாளர்களின் வருகை பதிவேடு ( Manual) ஆவணத்தை நான் நீதிமன்றத்தில் சமர்பிக்கிறேன். இந்த வருகை பதிவேட்டில் மே 2018 ம் மாதத்திற்கான வருகை பதிவேடு குறிப்புகளை நகல் எடுத்து சான்றொப்பம் செய்து நான் தாக்கல் செய்கிறேன். **மே 2018 ம் மாதத்திற்கான வருகை பதிவேடு குறிப்புகளின் சான்றிட்ட நகல் எ.ம.சா.ஆ. 17 ஆக குறியீடு செய்யப்படுகிறது. ( அரசு தரப்பு வழக்கறிஞர் ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது)**

3) மே 2018 ம் மாதத்திற்கான வருகை பதிவேட்டில் பணிபுரிந்த மொத்த நபர்களின் எண்ணிக்கை 11 ஆகும். இதில் மேற்குறிப்பிட்ட பாலசுப்ரமணி 6 வது நபராக பதிவு செய்து பராமரிக்கப்பட்டு வந்தது. மேற்படி வருகை பதிவேட்டில் மே 2018 மாதத்தில் பாலசுப்ரமணி எத்தனை நாட்கள் விடுமுறை எடுத்துள்ளார் என்றால் அந்த மாதத்தில் அவர் விடுப்பு எதுவும் எடுக்கவில்லை. 11.05.2018 ம்தேதியன்று பணிக்கு வந்ததாக வருகை பதிவேட்டில் கையொப்பம் செய்துள்ளார். எனக்கு நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வந்ததா என்றால் எங்கள் தலைமை வங்கி அலுவலகத்திற்கு அழைப்பாணை சென்றுள்ளது

Sd/–T.Wajitha Thabassm
நீதித்துறை நடுவர்,
கூடுதல் மகிளா நீதிமன்றம்,
கரூர்.

அதனடிப்படையில் தலைமை அலுவலகத்தில் இருந்து எங்கள் கிளையில் என்னை தொடர்பு கொண்டு நீதிமன்ற அழைப்பாணை தாமதமாக கிடைக்கப்பெற்றுள்ளதால் என்னை நீதிமன்றத்தில் ஏப்ரல் 2026 ல் ஆஜராகி 10 நாள் கால அவகாசம் கேட்க சொன்னார்கள். இறுதியாக என்னை நீதிமன்றத்தில் ஆஜராகி சாட்சியம் அளிப்பதற்கு அதிகாரம் அளித்துள்ளார்கள். என்னை ஆஜராக சொல்லி மின்னஞ்சல் மூலமாக தகவல் சொன்னார்கள்.

4) நான் நீதிமன்றத்தில் சமர்பித்த ஆவணம் எங்கள் வங்கியில் நடத்தகூடிய ஆண்டுகணக்கு தணிக்கையில் மேற்படி வருகை பதிவேடு தணிக்கை செய்யப்பட்ட ஆவணம் ஆகும்.

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

1) என்னிடம் காட்டப்படும் அழைப்பாணை யாருக்கு வந்தது என்றால் R.ஜெயகுமார், Regional Manager, Human Resources, HDFC Bank Pvt, No.96.First Floor, Prince Kushal Tower, Anna Salai, Chennai. அந்த அழைப்பாணையில் எதற்காக அனுப்பப்பட்டுள்ளது என்றால் கரூர் வங்கி கிளையில் பணிபுரிந்து வந்த பாலசுப்ரமணியம் த/பெ.ராமசாமி Employee code B3284 என்பவர் கடந்த 11.05.2018 ம்தேதி பணியில் இருந்தாரா அல்லது விடுப்பு எடுத்து உள்ளாரா என்பது குறித்து Manual Attendance, System Attendance. Sign Management Report ஆகிய ஆவணங்களை பார்வையிட்டு அது குறித்த சாட்சியத்தை நீதிமன்றத்தில் தக்க ஆவணங்களுடன் 15.04.2026 ம்தேதி நேரில் ஆஜராகுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான். எங்களது கரூர் வங்கி கிளைக்கு மேற்கண்ட விவரங்கள் குறித்து நீதிமன்றத்தில் ஆவணங்களுடன் ஆஜராகும்படி எந்த அழைப்பாணையும் பெறப்படவில்லை என்று சொன்னால் சரிதான்.

Sd/–T.Wajitha Thabassm
நீதித்துறை நடுவர்,
கூடுதல் மகிளா நீதிமன்றம்,
கரூர்.

2) எங்களது வங்கி தனியார் வங்கி என்றால் சரிதான். 20.08.2025 ம்தேதி இந்த நீதிமன்றத்தில்ஆஜராகி சாட்சியம் அளித்தேன் என்றால் சரிதான். சாட்சியம் அளித்தபோது 2018 காலகட்டத்தில் எங்கள் வங்கி கிளையில் வருகை பதிவேடு Manual ஆக பராமரிக்கப்பட்டு வந்ததாகவும், அந்த ஆவணங்களை சென்னை வங்கி ஆவணங்கள் சேகரிக்கும் நிறுவனமான Writers Information என்ற நிறுவனத்திற்கு அனுப்பப்பட்டுள்ளதாக சாட்சியம் அளித்தேன் என்று சொன்னால் சரிதான். பின்பு அந்த நிறுவனத்தில் கோரப்பட்டிருந்த வருகை பதிவேடு எங்கள் வங்கி கிளைக்கு கிடைக்கப்பெறவில்லை என்று முதல் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நாங்கள் கிளையில் தேடிபார்த்தபோது மேற்படி வருகை பதிவேடு எங்கள் கிளையில்தான் இருந்தது என்று இன்று காலை தெரியவந்தது. Writers Information நிறுவனத்திற்கு அனுப்பப்படவில்லை. மேற்படி விவரம் தற்போதுதான் தெரியவந்தது என்றால் சரிதான்.

3) Writers Information நிறுவனத்தில் இருந்து மேற்படி வருகை பதிவேடு சம்பந்தமாக எந்த விவரமும் எங்கள் வங்கிக்கு கிடைக்கப்பெறவில்லை என்றால் சரிதான். ஆனால் 2018 காலகட்டத்திற்குண்டான அனைத்து ஆவணங்களுமே நாங்கள் Writers Information நிறுவனத்திற்கு அனுப்பி வைத்துவிடுவோம் என்றால் சரிதான். ஏற்கனவே 20.08.2025 ம்தேதியன்று நான் சாட்சியம்அளித்தபோது எனது முதல் விசாரணையில் Manual Attendance ல் வங்கி ஊழியர் எத்தனை மணிக்கு பணிக்கு வந்துள்ளார், எத்தனை மணிக்கு வெளியே சென்றுள்ளார் என்ற விவரம் பதிவு செய்யப்படவில்லை என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். 2018 ம் வருட காலகட்டத்தில் ஆஜர் எதிரி என்ன வேலை பார்த்து வந்தார் என்றால் Cash Teller ஆக பணிபுரிந்து வந்தார். அவர் இருந்தபோது மற்றொரு நபரும் Cash Teller ஆக பணிபுரிந்து வந்தார்.

Sd/–T.Wajitha Thabassm
நீதித்துறை நடுவர்,
கூடுதல் மகிளா நீதிமன்றம்,
கரூர்.

4) பொதுவாக வங்கியில் வேலை பார்க்கும் நபர்கள் பணி நிமித்தமாகவோ அல்லது சொந்த வேலையின் காரணமாகவோ பணி நேரத்தில் வெளியில் செல்வார்கள் என்றால் சரிதான். எ.ம.சா.ஆ.16 ஆவணத்தில் எங்கள் வங்கி கிளைமேலாளருக்கு சென்னை தலைமை அலுவலத்தில் இருந்து தகவல் வந்ததின் பேரில் என்னை இந்த நீதிமன்றத்தில் ஆஜராகி சம்பந்தப்பட்ட ஆவணங்களை தாக்கல் செய்வதற்கு 10 நாட்கள் அவகாசம் கேட்கசொல்லிதான் அறிவுறுத்தப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். மேற்படி கடிதத்தில் எ.ம.சா.ஆ.17 ஐ தாக்கல் செய்யுமாறு குறிப்பிடவில்லை என்றால் சரிதான். அவ்வாறு சாட்சியம் அளிக்குமாறு அதிகாரம் கொடுத்து கடிதம் அனுப்பப்படாத நிலையில் எனது சாட்சியம் மற்றும் நான் தாக்கல் செய்த ஆவணங்கள் ஏற்றுகொள்ளதக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல.

5) என்னிடம் காட்டப்படும் எ.ம.சா.ஆ.17 வருகை பதிவேட்டில் முன்பகுதியில் எங்கள் வங்கியின் வருகை பதிவேடுதான் என்பதற்கான எந்த குறிப்பும் இல்லை என்று சொன்னால் சரிதான். எங்கள் வங்கியில் பராமரிக்கப்படும் Manual வருகை பதிவேடுகளில் எப்போதும் வங்கியின் பெயர் குறிப்பிடப்பட்டிருக்காது. எங்கள் வங்கியின் பெயர் குறிப்பிடாததால் எ.ம.சா.ஆ. 17 எங்களது வங்கியின் பராமரிக்கப்பட்ட வருகை பதிவேடு அல்ல என்று சொன்னால் சரியல்ல. என்னுடைய முதல் விசாரணையில் வருகை பதிவேடு தணிக்கை செய்யப்பட்டதாக கூறியுள்ள நிலையில் அவ்வாறு தணிக்கை செய்திருந்தால் தணிக்கை செய்த அதிகாரியின் பெயர் மற்றும் எந்த தேதியில் தணிக்கை செய்யப்பட்டது என்றும், அலுவலக அதிகாரியின் பெயர், பதவி, கிளை, அலுவலக முத்திரையும் குறிப்பிடப்பட்டிருக்கும் என்று சொன்னால் தணிக்கை செய்யும் அதிகாரி வங்கியின் சிசிடிவி காட்சிகள் மற்றும் வருகை பதிவேட்டினை ஒப்பிட்டு பார்த்து தணிக்கை செய்து தேதியுடன் கையொப்பம் செய்துள்ளார்.

Sd/-T.Wajitha Thabassm
நீதித்துறை நடுவர்,
கூடுதல் மகிளா நீதிமன்றம்,
கரூர்.

6) தணிக்கை அதிகாரி அவ்வாறு சிசிடிவி காட்சிகள் மற்றும் வருகை பதிவேட்டினை ஒப்பீடு செய்து தணிக்கை செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. எங்களது வங்கியில் 2010 ம் ஆண்டில் இருந்தே சிசிடிவி கேமரா பொருத்தப்பட்டிருந்தது. அவ்வாறு தணிக்கை செய்திருந்தால் அந்தஅதிகாரியின் பெயர், பதவி,அலுவலக முத்திரையும் குறிப்பிடப்பட்டிருக்கும் எ.ம.சா.ஆ.17 அவ்வாறு குறிப்பிடபடவில்லை என்று சொன்னால் L.தேவராஜ் என்பவர் தணிக்கை செய்து அவரது முழு கையொப்பம் செய்துள்ளார். 16.06.2014 ம்தேதியில் இருந்து ஆஜர் எதிரி எங்களது வங்கியில் பணிபுரிந்து வந்தார் என்பதற்கான ஆவணம் ஏதாவது தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் தாக்கல் செய்த ஆவணங்கள் அனைத்தும்,ஆஜர் எதிரி எங்களது வங்கியில் பணிபுரிந்து வந்த ஊழியர்என்பதால் அவரை இந்த வழக்கில் இருந்து தப்பிப்பதற்காக எங்களிடம் கேட்டுகொண்டதற்கிணங்க மேற்படி எ.ம.சா.ஆ.17 சென்னை Writers information நிறுவனத்திற்கு அனுப்பப்பட்டதாக ஏற்கனவே சாட்சியம் அளித்துவிட்டு, பின்னிட்டு தற்போது இந்த ஆவணம் எங்கள் கிளையில் உள்ளது என்று கூறி எதிரிக்காக பொய்யாக ஆவணங்களை தயார் செய்து அந்த ஆவணங்களின் பேரில் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

Sd/-T.Wajitha Thabassm
நீதித்துறை நடுவர்,
கூடுதல் மகிளா நீதிமன்றம்,
கரூர்.